# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.326/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா–11 (PW–11) |
| **பெயர்** | :– | **மருத்துவர். பாலசுப்ரமணியம்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 28 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மனநல பிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 06.01.2018 ஆம் தேதியன்று சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சின்னகாளிசெட்டி என்பவரின் மகன் வடிவேல் என்பவரின் மனநிலை சம்மந்தமான மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை வழங்குமாறு நீதிமன்றம் கடிதம் அனுப்பியிருந்தது. அந்த கடித்துடன் வடிவேலும் காவல் துறையினரால் கொண்டு வரப்பட்டார். வடிவேலை 06.01.2018 ஆம் நாள்முதல் 16.01.2018 ஆம் நாள்வரை உள்நோயாளியாக வைத்து கண்காணித்தோம். 16.01.2018 ஆம் தேதியன்று அவரை மருத்துவமனையிலிருந்து விடுவித்தோம்.

வடிவேலுவின் மருத்துவ வரலாற்றை அவருடைய மனைவியிடமிருந்து கேட்டு பெற்றோம். 2018 ஆம் ஆண்டுலிருந்து 15 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வடிவேல் மனநலம் பாதிக்கப்பட்டு தொடர்ச்சியாக சிகிச்சை பெறாமல் அவ்வப்போது சிகிச்சை பெற்றது தெரியவந்தது. வடிவேல் மது அருந்துவார் என்றும் போதை பொருட்களை பயன்படுத்துவார் என்றும் அவருடைய மனைவி சொன்னார். மேலும் அவருக்கு காசநோய் இருந்து அதற்கு சரியான சிகிச்சை எடுத்ததாக தெரியவில்லை. எங்களுடைய கண்காணிப்பில் பின்வரும் விவரங்கள் தெரியவந்தது.

1. வடிவேல் அடிக்கடி கோபம் அடைவார். அங்கு இருக்கும் மற்ற நோயாளிகளுடன் சண்டை போடுவது, தகாத வார்த்தைகளை பேசுவது, அடிக்க செல்வது போன்ற செயல்களில் ஈடுபடுவார்.

2. வடிவேல் தன்னைப்பற்றி பெருமையாக பேசிக்கொண்டிருப்பார்.

3. தேவையற்ற விடயங்கள் குறித்து அதிகமாக பேசுவார்.

எங்களுடைய கண்காணிப்பாளிலிருந்து தீவிரமான மனநோயான இருமுனை மனநல கோளாறு ( Bipolar mood disorder current episode mania) என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று தெரியவந்தது.

முந்தைய மருத்துவ சிகிச்சை குறித்து ஆவணங்களை கேட்டோம். அவருடைய மனைவி உரியவாறு சிகிச்சை எடுக்காததால் ஆவணங்கள் இல்லை என்று கூறினார். அவருக்கு தொடர்சிகிச்சை தேவை என்று அறிவுறுத்தினோம். 16.01.2018 ஆம் தேதியன்று உரிய சான்றிதழ் வழங்கினேன். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இதுபோன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தான் செய்வது என்னவென்று ஓரளவு தெரியும். செய்யகூடிய செயல் தெரியும். விளைவு தெரியாது. வழக்குச் சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நேரத்தில் அவர் எப்படி இருந்தார் என்று உறுதியாக சொல்ல முடியாது. மேற்சொன்ன குறைபாடு மது அருந்துவததாலும் போதை பொருட்களை உட்கொள்வதாலும் ஏற்படலாம். வாய்புகள் குறைவு. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.